# சட்டவரைஞர் திணைக்களம்

# 2017

## செயல்நிறைவேற்றுகை அறிக்கை

## நோக்கு

அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதன்மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்குத் துணைபுரிதல்.

## பணி

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அத்தகைய சட்டவாக்கத்தின் வரைதல் அரசியலமைப்பிற்கிணங்கச் செய்யப்படுதல்.

## அறிமுகம்

சட்டவரைஞர் திணைக்களம், "A" தரத்திலான அரசாங்கத் திணைக்களமொன்றாகவுள்ளது. அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணியாற்றிய இத்திணைக்களம், 2015.08.01 ஆந்தேதிய 1897/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி நீதி மற்றும் தொழில் அலுவல்கள் அமைச்சரின் நேரடி மேற்பார்வையின்கீழ் வந்ததுடன், இத்திணைக்களம் 2015.09.21 ஆந்தேதிய 1933/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி நீதியமைச்சின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணியாற்றுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் முக்கிய பணி, அரசியலமைப்புக்கிசையவும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட முடிபுகளுக்கு இணங்கவும் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலாகும். அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுகின்ற நடைமுறையில் இத்திணைக்களமானது, புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் சட்டமூலங்களை வரைகின்றதுடன், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்வுசெய்கின்றது. இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏனைய கடமைகள், வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படும்போது பாராளுமன்றத்தில் சமூகமாயிருப்பதனையும் பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதனையும் உள்ளடக்கும். அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, இத்திணைக்களம் எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் தயாரித்தல் தொடர்பாக இத்திணைக்களமானது அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

### 1. சட்டமூலங்களை வரைதல் தொடர்பாகச் சட்டவரைஞர் திணைக்களத்தின் பணிகள் பின்வருமாறாகும்:-

(1) புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கு மும்மொழிகளிலும் சட்டமூலங்களை வரைதலும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துதலும்.

(2) துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் (அவசியமானவிடத்து) அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்.

(3) சட்டங்களைத் தயாரித்தலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.

(4) மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்.

(5) தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்களை (கூட்டிணைத்தற் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்.

சட்டங்களையும், துணைநிலைச் சட்டவாக்கங்களையும், மாகாணசபை நியதிச்சட்டங்களையும் வரைதல் தொடர்பில் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இத்திணைக்களம் அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல், கொடுக்கப்பட்டவொரு நேரத்தில், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின் மீது அவசியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டுபூராகவும் முறையான துறைசார் அமைச்சுக்களினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களுக்காக அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோள்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் அடிப்படையின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம் வேண்டுகோள் விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மும்மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

**2. பணியாட்டொகுதியினர்**

சட்டவரைஞர் திணைக்களத்தின் பணியாட்டொகுதியினர் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர்கோப்பு 148 ஆகும்; அத்துடன், 2017.12.31 ஆந்தேதியன்றுள்ளவாறு தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர்கோப்பு 105 ஆகவிருந்தது.

| **தொழிலின் வகுதி** | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு** | **தொழிலில் இருந்த ஊழியர் கோப்பு** |
|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 42 | 29 |
| மூன்றாந்நிலை மட்டம் | 28 | 14 |
| இரண்டாந்நிலை மட்டம் | 54 | 40 |
| முதனிலை மட்டம் | 24 | 22 |

## 2017.12.31 அன்றுள்ளவாறு சட்டவரைஞர் திணைக்களத்தின் ஊழியர் கோப்பு

| சிரேட்ட மட்டம் | | | மூன்றாந்நிலை மட்டம் | | | இரண்டாந்நிலை மட்டம் | | | முதனிலை மட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது |
| சட்டவரைஞர் | 01 | 01 | நிருவாக அலுவலர் | 01 | 01 (ஒப்பந்த அடிப்படை) | அபிவிருத்தி உதவியாளர் | 02 | - | சாரதி | 10 | 09 |
| மேலதிகச் சட்டவரைஞர் | 01 | 01 | பிரதான மொழி பெயர்ப்பாளர் | 02 | 01 | நூலகர் | 01 | 01 | கே.கே.எஸ் (KKS) | 14 | 13 |
| பிரதிச் சட்டவரைஞர் | 05 | 05 | மொழிபெயர்ப்பாளர் | 24 | 11 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 20 | 17 | | | |
| சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் | 08 | 01 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப அலுவலர் | 01 | 01 | ஆவணப் படுத்துகை உதவியாளர் | 20 | 15 | | | |
| உதவிச் சட்டவரைஞர் | 25 | 20 | | | | பதிப்பாசிரியர் | 11 | 07 | | | |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | | | | | | | | | |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 01 | - | | | | | | | | | |
| கூட்டுமொத்தம் | 42 | 29 | | 28 | 14 | | 54 | 40 | | 24 | 22 |
| மொத்தம் | | | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 148 | | | உள்ளபடியான எண்ணிக்கை 105 | | | | |

**திணைக்களத்தில் ஏலவேயுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்.**

திணைக்களத்தின் ஒட்டுமொத்தக் கடமைகளைப் புரிவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 148 ஆகும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டில் சொல்லப்பட்ட கடமைகளைப் புரிவதற்குத் திணைக்களத்திலிருந்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை 105 தேயாகும். கீழே கூறப்பட்டவாறு, பல்வேறு தொழில் மட்டங்களிலான தொழில் தொடர்பாக 43 வெற்றிடங்கள் உள்ளன.

**சிரேட்ட மட்டம்**

அ) பிரதிச் சட்டவரைஞர் பதவியில் வெற்றிடங்கள் எவையுமில்லை. 05 நிரந்தரமான அலுவலர்கள் உள்ளனர்.

ஆ) சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் பதவியில் 07 வெற்றிடங்கள் உள்ளன. ஏனெனில், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின்படி சொல்லப்பட்ட வெற்றிடத்துக்கு விண்ணப்பிப்பதற்குத் தகைமைபெற்றவர்களாக உள்ள உதவிச் சட்டவரைஞர்களெவரும், அதாவது பத்தாண்டுகளைக் கொண்ட சேவைக் காலப்பகுதியைப் பூர்த்திசெய்துள்ள உதவிச் சட்டவரைஞர்களெவரும் இல்லை. சொல்லப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கென உதவிச் சட்டவரைஞர்கள் தேவைப்பட்ட சேவைக் காலப்பகுதியைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

இ) உதவிச் சட்டவரைஞர் பதவியில் 5 வெற்றிடங்கள் உள்ளன. அவ்வெற்றிடங்களை நிரப்புமுன்னர் ஆட்சேர்ப்புத்திட்டம் திருத்தப்படவேண்டும். தேவைப்பட்டதைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இயைபான நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**மூன்றாந்நிலை மட்டம்**

நிருவாக அலுவலர் பதவி வறிதாகவுள்ளது. ஒப்பந்த அடிப்படையில் தற்போது ஓர் அலுவலர் உள்ளார். சொல்லப்பட்ட வெற்றிடம்பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பதிலொன்று இதுவரை பெறப்படவில்லை.

அ) மொழிபெயர்ப்பாளர்கள் பதவியிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான எழுத்துப்பரீட்சை 2016.09.04 ஆந்தேதியன்று நடாத்தப்பட்டு, 16 சிங்கள, தமிழ் மொழிமூலமான விண்ணப்பகாரர்கள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பகாரர்களுளிருந்து தேறியுள்ளனர். 10 சிங்கள

மொழிமூலமான விண்ணப்பகாரர்களும் 03 தமிழ்மொழிமூலமான விண்ணப்பகாரர்களும் மட்டுமே கடமையை ஏற்றுள்ளனர்.

(ஆ) அதற்கிணங்க, 2017.12.31 அன்றுள்ளவாறு, 13 வெற்றிடங்கள் உள்ளன. ஆங்கில / சிங்கள மொழிபெயர்ப்பாளர் பதவிகள் 05 மற்றும் ஆங்கில / தமிழ் மொழிபெயர்ப்பாளர் பதவிகள் 08.

சம்பள அளவுத்திட்டம் குறைவாகவிருக்கின்றமையினால் அவர்களைச் சேவையில் வைத்திருப்பது சிரமமாகவுள்ளது. ஆதலால் இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத்திட்டத்தை மாற்றவேண்டியுள்ளது. ஆதலால் விதப்புரையுடன் மீளாய்வு செய்யப்பட்ட சம்பள அளவுத்திட்டம் அங்கீகாரத்துக்காக இயைபான நிறுவகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>இரண்டாந்நிலை மட்டம்</u>**

அ) இரண்டு அபிவிருத்தி உதவி அலுவலர்களை வழங்கும்படி 2016.10.11 ஆந்தேதிய கடிதத்தின்மூலம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டது.

ஆ) 2017.12.31 அன்றுள்ளவாறு ஆவணப்படுத்துகை உதவியாளர் பதவியில் 05 வெற்றிடங்களும் பதிப்பாசிரியர் பதவியில் 04 வெற்றிடங்களும் இருந்தன. 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையின் அடிப்படையில் 2016.08.23 அன்று நேர்காணலொன்று நடாத்தப்பட்டதுடன் அதன் பெறுபேறுகளின்மீது 8 ஆவணப்படுத்துகை உதவியாளர்களும் 8 பதிப்பாசிரியர்களும் ஆட்சேர்க்கப்பட்டனர். தற்போது அவர்களுள் 01 ஆவணப்படுத்துகை உதவியாளரும் 02 பதிப்பாசிரியர்களும் தமது பதவிகளை விட்டுநீங்கியுள்ளனர். குறைவான சம்பள அளவுத்திட்டம் காரணமாக சேவையில் வைத்திருத்தல் பிரச்சினையாக வந்துள்ளது.

**<u>முதனிலை மட்டம்</u>**

அ) சாரதி பதவியில் ஒரு (01) வெற்றிடமுள்ளது. இது தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆ) KKS பதவியில் ஒரு (01) வெற்றிடமுள்ளது. வெற்றிடம்பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3. திணைக்களத்தின் பிரிவுகள்

இத்திணைக்களமானது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளைப் புரிவதற்குப் பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது.

சட்ட வரைதற் பிரிவு.
தாபன மற்றும் நிருவாகப் பிரிவு.
மொழிபெயர்ப்புப் பிரிவு.
வெளியீட்டுப் பிரிவு.
கணக்குப் பிரிவு.

### சட்டவரைதற் பிரிவு

இப்பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறாகும்:-

- அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதல்.
- புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் மற்றும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் எனச் சட்டமூலங்களை மும்மொழிகளிலும் வரைதல்.
- சட்டமூலங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல்.
- சட்டமூலங்களை வரைதலுடனும் சட்டவாக்கங்களை நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.
- மாகாணசபைகளுக்கான நியதிச்சட்டங்களை வரைதல்.

# <u>முன்னேற்ற மீளாய்வு – 2017.01.01 முதல் 2017.12.31 வரை</u>

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடமையின் தன்மை | அடிப்படை அல்லது பூர்த்தி செய்யப்பட்ட சட்டமூலங்களாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆனால் 2018.01.01 அன்று சட்டத்துறைத் தலைமையதிபதியின் அல்லது வேறு அமைச்சர்களின் மற்றும் திணைக்களங்களின் அவதானிப்புகளையும் அறிவுறுத்தல்களையும் காத்திருக்கின்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை (முன்கொரணப்பட்ட மீதி) | 2018.01.01 அன்றுள்ளவாறு வரைதல் பூர்த்தி செய்யப்படாத கோரிக்கைகளின் எண்ணிக்கை (முன்கொணரப்பட்ட மீதி) | இந்த ஆண்டினுள் திறத்தவர்களிட மிருந்து பெறப்பட்ட புதிய கோரிக்கைகளின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டுகளிலும் இவ்வாண்டிலும் மும்மொழிகளிலும் வரைதல் செய்து முடிக்கப்பட்ட ஆனால் திருத்தங்களைக் காத்திருக்கும் கோரிக்கைகளின் எண்ணிக்கை | மொத்தம் | மும்மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட்டு திறத்தவர்களுக்குத் திருப்பியனுப்பப்பட்ட வரையப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை (பலதடவைகள் முன்மொழிகளிலும் செய்யப்பட்டு இயைபான திறத்தவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி வரைவுகளின் ஒவ்வொரு சந்தர்ப்பமும்) | நீண்ட காலத்துக்கான அறிவுறுத்தல்கள் இல்லாமையினால் மூடிவிடப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 2017.12.31 ஆந்திகதி அடிப்படை அல்லது பூர்த்திசெய்யப்பட்ட வரைவுகளாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஆனால் சட்டத்துறைத் தலைமையதிபதியினது அல்லது ஏனைய அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் அவதானிப்புகள் அல்லது அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறவுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை | 2017.12.31 ஆந் திகதி அன்றுள்ளவாறு வரைதல் பூர்த்தி செய்யப்பட்டிராத கோரிக்கைகளின் எண்ணிக்கை |
| சட்டமூலங்களை வரைதல் (முதன்மைச் சட்டவாக்கங்களும் திருத்தச் சட்டவாக்கங்களும்) | 138 | 21 | 73 | 27 | 259 | 63 | 30 | 156 | 10 |
| தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் (கூட்டிணைத்தல்) | 108 | | 32 | | 140 | 9 | 1 | 130 | |
| துணைநிலைச் சட்டவாக்கங்களின் மீளாய்வு | 119 | 17 | 156 | 49 | 341 | 184 | - | 126 | 31 |
| மாகாண சபைகளின் நியதிச்சட்டங்கள் | 23 | 2 | 2 | - | 27 | 2 | 16 | 8 | 1 |

குறிப்பு:-

இத்திணைக்களத்தினால் கவனத்துக்கெடுக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு இறுதிவரைவாக அனுப்பப்பட்ட கோரிக்கையொன்று, முக்கியமாக அறிவுறுத்தும் முகவராண்மைகள் கொள்கையை மாற்றிக்கொண்டிருப்பதன் காரணமாக மேலதிகத் திருத்தங்களுக்காகப் புதிய அறிவுறுத்தல்களுடன் மீண்டும் அனுப்பிவைக்கப்படக்கூடும். எவ்வாறாயினும், அத்தகையவொரு கோரிக்கை பெறப்படும்போது, அது முன்னரே இறுதியாக்கப்பட்டிருப்பதனைப் பொருட்படுத்தாது, இத்திணைக்களம், ஒரு புதிய கோரிக்கைக்குக் கொடுக்கின்ற அதே நேரத்தையும் கவனத்தையும் அதற்காக அர்ப்பணித்து அதனைக் கவனத்துக்கெடுக்கவேண்டியுள்ளது. மேலும், பூர்த்தி செய்யப்பட்ட வரைவுகளுக்கு அத்தகைய திருத்தங்களுக்கான கோரிக்கைகள், இறுதிவரைவு மும்மொழிகளிலும் அனுப்பப்பட்டபின்னருங்கூட செய்யப்படுகின்றனவென்பதுடன், சிலவேளைகளில் இந்நடவடிக்கைமுறை பலதடவைகள் இடம்பெறுகின்றது. பின்வருவன சில உதாரணங்களாகவுள்ளன:-

| **சட்டமூலத்தின் பெயர்** | **(2017.12.31 வரை) வரைவு அனுப்பப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை** |
|---|---|
| தேசியக் கணக்காய்வுச் சட்டமூலம். | 22 |
| மோட்டார் வாகனச் சட்டமூலம். | 23 (நிறைவேற்றப்பட்டுள்ளது) |
| அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம். | 14 |
| காணி வங்கிகளைத் தாபிப்பதற்கான சட்டமூலம். | 14 |
| காணி அபிவிருத்திச் சட்டமூலம். | 14 |
| ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம். | 11 |
| இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம். | 15 (குழுநிலைத் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது) |
| வலிந்துதவும் சமூக சேவைகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) (திருத்தச்) சட்டமூலம். | 12 |
| தேசியக் கண் வங்கிச் சட்டமூலம். | 09 |
| உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம். | 15 (குழுநிலைத் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது) |

ஆதலால், கோரிக்கையொன்று இத்திணைக்களத்தினால் கவனத்துக்கெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருப்பினும்கூட, இவை, ''பூர்த்திசெய்யப்பட்டிராத கோரிக்கைகள்'' என்ற வகுதியில் தொடர்ந்தும் பிரதிபலிக்கப்படக்கூடும்.

**<u>தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் (கூட்டிணைத்தல் பற்றி)</u>**

அமைச்சரவையின் உபகுழுவினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, கணக்காய்வுச் சட்டமூலம், தகவலுக்கான உரிமைச் சட்டமூலம் மற்றும் அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் தொடர்பான சட்டமூலம் என்பன நிறைவேற்றப்படும்வரை, உயர்தொழில்சார் நிறுவனங்களுக்காகத்தவிர தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் (கூட்டிணைத்தல்) தொடர்பான பணி மேற்கொண்ட அறிவித்தல் பெறப்படும்வரை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. ஆகவே, 2017.12.31 அன்றுள்ளவாறு பூர்த்திசெய்யப்படாத தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்களின் எண்ணிக்கை (கூட்டிணைத்தல்பற்றி) 130 ஆகவுள்ளது.

**<u>சட்டமூலங்கள் (முதன்மைச் சட்டவாக்கங்களும் திருத்தச் சட்டவாக்கங்களும்)</u>**

பணி நிறைவேற்றப்பட்டிராத சட்டமூலங்கள் (முதன்மைச் சட்டவாக்கங்களும் திருத்தச் சட்டவாக்கங்களும்) அவைதொடர்பில் இயைபான அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் என்பவற்றிடமிருந்து அறிவுறுத்தல்கள் அல்லது அவதானிப்புகள் எவையும் பெறப்பட்டிராத அல்லது அவைதொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிராத அல்லது இன்னமும் கலந்துரையாடலின் கீழுள்ளவையாக உள்ளன.

<u>துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தல்</u>

(துணைநிலைச் சட்டவாக்கங்கள்) தொடர்பாக மீளாய்வு பூர்த்திசெய்யப்படாத 31 கோரிக்கைகள் உள்ளன. அவை, இயைபான அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் அறிவுறுத்தல்கள் அல்லது அவதானிப்புகள் பெறப்பட்டிராதவையாக அல்லது இன்னமும் கலந்துரையாடலின் கீழுள்ளவையாக உள்ளன.

## தாபன மற்றும் நிருவாகப் பிரிவு

இப்பிரிவு, பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் பயிற்சி, திறமைத் தடைகாண் பரீட்சைகளை நடாத்துதல், ஒழுக்காற்றுக் கருமங்கள் மற்றும் போக்குவரத்துத் தொடர்பான கருமங்கள் அத்துடன் இத்திணைக்களத்திலுள்ள மற்றெல்லா நிறுவனஞ்சார், நிருவாகக் கருமங்கள் என்பவற்றைக் கையாளுகின்றது.

(1) **பயிற்சி:**

**உள்நாட்டுப் பயிற்சி.**

அலுவலர்களுக்குப் பின்வருமாறு உள்நாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது:

| நிறுவகம் | பதவி | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை | கற்கைநெறி |
|---|---|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | உதவிச் சட்டவரைஞர் | 01 | தத்துவவியல் முதுமாணி/தத்துவவியல் கலாநிதி நிகழ்ச்சித்திட்டம் 2017 (2 ஆவது ஆண்டு) |
| | உதவிச் சட்டவரைஞர் | 01 | தத்துவவியல் முதுமாணி/தத்துவவியல் கலாநிதி நிகழ்ச்சித்திட்டம் 2017. |
| | உதவிச் சட்டவரைஞர் | 01 | மனித உரிமைகளில் முதுமாணி (மஉமு) 2017/2018. |
| சார்க் | உதவிச் சட்டவரைஞர் | 02 | 14 ஆவது சார்க் சட்ட மாநாடு 2017. |
| இலங்கை நூலகச் சங்கம் | நூலகர் | 01 | நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பில் தேசிய மாநாடு |
| மிலோதா நிறுவகம் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 | சம்பளப்பட்டியல் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| தேசியத் தொழிற்கற்கைகள் நிறுவகம் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 | அடிப்படைக் களஞ்சிய முகாமைத்துவம் |
| | | 01 | உற்பத்தித்திறன் கருவியாக சுப்பர் 5S |
| | | 01 | நிலையான சொத்தை முகாமைசெய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | 01 | கணக்கீட்டு மற்றும் செயல்முறைகளின் பங்களிப்பு |
| ஆர்ஏஜி நிறுவகம் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 | அலுவலக வேலைக்காக எக்செல்லைப் பயன்படுத்துதல் |
| | | 01 | ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை |

**(2) <u>வெளிநாட்டுப் பயிற்சி.</u>**

| சட்டவரைஞர் திணைக்களத்தின் நிறைவேற்றலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டு மாநாடுகளும் பயிற்சியும் - 2017 | | |
|---|---|---|
| | **பயிற்சியின் பெயரும் நாடும்** | **பங்குபற்றிய அலுவலரின் பெயர்** |
| 1. | லோ ஏஷியா மாநாடு 2018 – யப்பான்<br>2017 செத்தெம்பர் 18 முதல் 21 வரை | திருமதி.டீ.எஸ்.எச். குமாரஜீவ<br>சட்டவரைஞர் |
| 2. | உயர்தரச் சட்டவாக்க வரைதல் தொடர்பான கற்கைநெறி – 2017 ஐ.அ.நா.<br>2017 ஒற்றோபர் 09 முதல் 20 வரை | திருமதி கே.ஆர்.வை.ஹப்புஆராச்சி<br>மேலதிக சட்டவரைஞர்<br><br>திருமதி ரீ.ஏ.வை.எம்.ரணவண<br>பிரதிச் சட்டவரைஞர் |
| 3. | ஐஅமெரிக்கநாடுகள், லூசியனா, நியூ ஓர்லியன்ஸ், பகிரங்கச் சட்ட நிலைய சர்வதேசச் சட்டவாக்க வரைதல் நிறுவகம் 2017<br>2017 யூன் 05 முதல் 16 வரை | செல்வி எம்.ஏ.கே.ஏ.மெதகொட<br>உதவிச் சட்டவரைஞர்<br><br>திருமதி வீ.எஸ்.துஷாரி<br>உதவிச் சட்டவரைஞர்<br><br>செல்வி ஏ.கே.டீ.ஜீ.ஐ.கே.அபயவிக்ரம<br>உதவிச் சட்டவரைஞர் |
| 4. | சட்டவாக்க வரைதலிலான கற்கைநெறி 2017 – ஐக்கிய இராச்சியம்<br>2017 யூன் 26 முதல் யூலை 21 வரை | திருமதி எம்.பீ.குலரத்ன<br>உதவிச் சட்டவரைஞர்<br><br>திருமதி டீ.எம்.டீ.கே.திசாநாயக்க<br>உதவிச் சட்டவரைஞர் |

| | | |
|---|---|---|
| | | செல்வி ஆர்.பீ.கொடித்துவக்கு<br>உதவிச் சட்டவரைஞர் |
| 5. | சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மீதான 30 ஆவது எஸ்ஏரீஎஸ் - பாகிஸ்தான்<br>2017 நவம்பர் 13 முதல் 17 வரை | திரு.எஸ்.செல்வகுணபாலன்<br>பிரதிச் சட்டவரைஞர் |
| 6. | ரீசீவை 18 ஆவது பொதுக் கூட்டம் - பிரான்ஸ்<br>2017 நவம்பர் 27 முதல் 30 வரை | திருமதி எல்.ஜீ.புஞ்சிஹேவ<br>உதவிச் சட்டவரைஞர் |

**(3) ஏனைய நிறுவனஞ்சார் மற்றும் நிருவாகச் செயற்பாடுகள்.**

i. உள்நாட்டுரீதியிலும் சர்வதேசரீதியிலும் சட்டத்துறையில் நடைமுறையிலுள்ள அபிவிருத்திகள்பற்றி அலுவலர்களைப் பரிச்சயமுள்ளவர்களாக வைத்திருக்கும் மற்றும் அது தொடர்பாக அவர்களின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், இத்திணைக்களம் I ஆம் தர நூலகமொன்றைத் தாபித்துள்ளது. 173 உள்நாட்டு, வெளிநாட்டுப் புத்தகங்கள் 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ii. திணைக்கள ஊழியர்களின் நலனுக்காகத் திணைக்களத்தில் சேமநலச் சங்கமொன்றுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இச்சங்கம் அதன் உறுப்பினர்களுக்குக் கடன்வசதிகளை வழங்கியதுடன் பணியாட்டொகுதி உறுப்பினர்களிடையே ஒற்றுமையை மேம்படுத்துவதற்கு கலாசார விழாக்களையும் அவர்களின் ஆன்மீக விருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு மதநிகழ்ச்சிகளையும் நடாத்தியது; அத்துடன் சங்கமானது திணைக்களத்தின் எல்லாப் பணியாட்டொகுதியினரினதும் நன்மைக்காக ஒரு சிறிய நூலகத்தையும் தாபித்தது.

iii. சட்ட அலுவலர்களின் சேமநலத்துக்காகச் சட்ட அலுவலர்கள் கழகமொன்று தாபிக்கப்பட்டுள்ளது. அலுவலர்களின் ஏனைய சேமநலத் தேவைகளைக் கவனிக்கும் அதேவேளையில், அலுவலர்களின் உயர்தொழில்சார் தேர்ச்சிகளின் அபிவிருத்திக்காக இக்கழகம் வழிவகுக்கின்றது.

## மொழிபெயர்ப்புப் பிரிவு

மொழிபெயர்ப்புப் பிரிவானது, (புதிய சட்டவாக்கங்களினதும் திருத்தச் சட்டவாக்கங்களினதும்) சட்ட வரைதற் பிரிவினால் ஆங்கிலத்தில் வரையப்பட்ட எல்லா வரைவுச் சட்டமூலங்களையும் மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் இயைபான மொழிகளில் மொழிபெயர்ப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. தாபன, நிருவாக மற்றும் கணக்குப் பிரிவுகளினால் அனுப்பப்பட்ட அலுவலகமுறையான ஆவணங்களைத் தேவைப்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது.

## வெளியீட்டுப் பிரிவு

வரைவுச் சட்டமூலங்களினதும் துணைநிலைச் சட்டவாக்கங்களினதும் ஆங்கில, சிங்கள, தமிழ் உரைகளை ஒப்புநோக்குவதற்கும் சரிபார்ப்பதற்கும், அரசாங்க அச்சகரினாலும் பாராளுமன்றத்தினாலும் அனுப்பிவைக்கப்பட்ட இயைபான ஒப்புநோக்கற் பிரதிகளையும் தாய்ப் பிரதிகளையும் வரைவுகளின் கையெழுத்துப் பிரதிகளுடன் வாசிப்பதற்கும் வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. சட்ட அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் அத்தகைய ஒப்புநோக்கற் பிரதிகள் பதிப்பிக்கப்படுமிடத்து அரசாங்க அச்சகருடனும் பாராளுமன்றத்துடனும் ஒருங்கிணைவதற்கும் அரசாங்க வர்த்தமானியில் சட்டமூலங்கள் வெளியிடப்படுதல் தொடர்பான கருமங்களைப் புரிவதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது. சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பான கோப்புகளைச் சட்ட அலுவலர்களுக்குப் பகிர்ந்தளித்தலும் இப்பிரிவினால் செய்யப்படுகின்றது.

# கணக்குப் பிரிவு

## 230- சட்டவரைஞர் திணைக்களம்

## 2017-01-01 முதல் 2017-12-31 வரை

### செலவு விவரணம்

தலைப்பு : 230-சட்டவரைஞர்

நிகழ்ச்சித்திட்டம் : 01 தொழிற்பாடுகள்

கருத்திட்டம் : 01 பொது நிருவாகமும் சட்டம் வரைதலும்

(அ) 2017.01.01 முதல் 2017.12.31 வரையில் மீண்டுவரும் செலவினம்.

| மீண்டுவரும் செலவினத்தின் விவரணம் | வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் (ரூபா) | மேலதிக ஏற்பாடுகள் (ரூபா) | தேறிய ஏற்பாடுகள் (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| சம்பளமும் வேதனங்களும் | 83,182,000.00 | - | 83,182,000.00 | 70,495,313.18 | 84.75% |
| ஏனைய செலவினம் | 24,080,000.00 | 1,942,000.00 | 26,022,000.00 | 25,117,915.80 | 96.53% |
| மொத்த மீண்டுவரும் செலவினம் | 107,262,000.00 | 1,942,000,00 | 109,204,000.00 | 95,613,228.98 | 87.55% |

2017.01.01 முதல் 2017.12.31 வரை

| மூலதனச் செலவினத்தின் விவரணம் | வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள் (ரூபா) | மேலதிக ஏற்பாடுகள் (ரூபா) | நிதி ஒழுங்குவிதி 66 இன் படியான மாற்றங்கள் | தேறிய ஏற்பாடுகள் (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| **மூலதனச் சொத்துக்களைக் கொள்ளுதல்**<br><br>2102- தளபாடங்களும் அலுவலகச் சாதனங்களும் | 500,000.00 | | 53,000.00 | 553,000.00 | 551,964.83 | 99.81% |
| **தேர்ச்சிகள் அபிவிருத்தி**<br><br>2401 – பணியாட் டொகுதியினர் பயிற்சி | 6,200.000.00 | 15,000.000.00 | | 21,200,000.00 | 20,998,462.03 | 99.05% |
| **ஏனைய மூலதனச் செலவினம்**<br><br>2501- மீளக்கட்டமைத்தல் | 6,000,000.00 | | -738,000.00 | 5,262,000.00 | 4,008,901.76 | 76.19% |
| 2506 – உட்கட்டமைப்பின் அபிவிருத்தி<br><br>சட்டப் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் | 2,500,000.00 | | 685,000.00 | 3,185,000.00 | 3,181,334.00 | 99.88% |
| **மூலதனச் செலவினத்தின் மொத்தம்** | **15,200,000.00** | **15,000,000.00** | **0.00** | **30,200,000.00** | **28,740,662.62** | **95.17%** |

**நிறுவனத்தின் செயல்நிறைவேற்றுகை பற்றிய சுருக்கம்**

சட்டவரைஞர் திணைக்களத்தின் பிரதான பணியானது பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளை அரசியலமைப்புக்கு ஒத்ததாகவுள்ள சட்டவாக்கங்களாக உருமாற்றம் செய்வதாகும். இந்நடைமுறை, புதிய சட்டவாக்கங்களை வரைதல், ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துதல் மற்றும் இயைபான அமைச்சுக்களினால் ஆற்றுப்படுத்தப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்வுசெய்தல் என்பவற்றைக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனைசெய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் துறைசார் தெரிவுக் குழுக்களின் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும், சட்டமூலங்கள் விவாதத்திற்கு எடுக்கப்படும் போது பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைவதனையும் உள்ளடக்குகின்ற குறித்த சில வேறு கடமைகளும் இத்திணைக்களத்திற்குப் பொறுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், துணைநிலைச் சட்டவாக்கங்களைத் தயாரித்தல் தொடர்பாக அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

அரசியலமைப்புக்கு இணங்கியொழுக, இலங்கையின் சட்டவாக்கங்களை அலுவலக முறையாக ஒன்றுதிரட்டுதலையும் மீளாய்வுசெய்தலையும் அவை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுதலையும் இலக்காகக் கொண்ட 4 வருடக் கருத்திட்டத்திலும் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இக்கருத்திட்டம் இவ்வாண்டு திசெம்பர் 31 ஆந்தேதியன்று முடிவடையும். இன்னுமோர் 6 ஆண்டுகளுக்குக் கருத்திட்டக் காலப்பகுதியை நீட்டிப்பதற்கு அமைச்சரவைக்குக் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் பணி 2017 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதிலும், தொழினுட்ப மதிப்பீட்டுடனும் புத்திக்கூர்மையுடனும் நுண்ணியமானவொருமுறையில் சட்டவாக்க வரைதலில் விசேடித்த தேர்ச்சிபெற்ற ஆட்களினால் கருத்திட்டத்தின் பணி புரியப்படுவதற்குத் தேவைப்பட்டதாதலாலும், கருத்திட்டத்தில் ஈடுபடுத்தப்படுவதற்கு அத்தகைய ஒருசில அலுவலர்களே இருந்தமையினாலும், அத்தகைய பெரும்பாலான அலுவலர்கள், அலுவலகத்தின் நாளாந்தக் கடமைகளை நிறைவேற்றும் சட்டவாக்க வரைஞர்களாக இருந்தமையினாலும், கருத்திட்டத்தின் பணிக்குக் கூடுதலான வேலையும் நேரமும் தேவையாகவிருக்கின்றமையினாலும், 2017 ஆம் ஆண்டினுள் கருத்திட்டத்தின் பணியைப் பூர்த்திசெய்வதற்கு இயலாமலிருந்தது.

'சட்டவாக்க வரைதற் பிரிவின்'கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு 2017 ஆம் ஆண்டுக்கு இயைபான சட்டமூலங்களை வரைதல் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**திணைக்களப் பணியின் செயல்நிறைவேற்றுகையை மேம்படுத்துவதற்கு மிக்க அண்மையில் எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வழிமுறைகள்**

**1. <u>அலுவலகமுறையான இணையத்தளத்தின் அபிவிருத்தி</u>**

சட்டவரைஞர் திணைக்களத்துக்கான அலுவலகமுறையான இணையத்தளம் இல்லாமையைப் பூர்த்திசெய்தலானது நீண்டகாலத் தேவையாகவிருந்தது. ஆதலால், அரசாங்கத்தின் E – ஆளுகைக் கொள்கைகளுக்கிணங்கவும் பொதுமக்களின் சிறந்த விழிப்புணர்வுக்காகவும் திணைக்களமானது ஓர் இணையத்தளத்தை வடிவமைத்து அபிவிருத்திசெய்வதற்கு உட்கருதியது.

இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் முகவராண்மையின் (இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் முகவராண்மை) உதவியுடன், திணைக்களமானது ஓர் இணையத்தளத்தை வடிவமைத்து அபிவிருத்திசெய்ததுடன் புதிய இணையத்தளம் இப்போது தொடரிணையிலுமுள்ளது; இதனை URL://ld.gov.lk என்பதனூடாக அணுகமுடியும்.

**2. <u>சட்டவாக்கங்கள் (1956) என்பவற்றையும் சட்டவரைஞர் திணைக்களத்தின் பதிவேட்டறை ஆவணங்களையும் எண்ணிமமயப்படுத்துதல்.</u>**

இலங்கைச் சட்டவாக்கங்களும் (1956 பதிப்பு) அவற்றின் துணைநிலைச் சட்டவாக்கங்களும், அடிக்கடி பார்வையிடப்படும் சட்டங்களின் முக்கியமானவொரு தொகுதியாகவுள்ளன. அவை கட்டப்பட்ட தொகுதிகளில் கிடைக்கக்கூடியனவாகவுள்ளன. ஆனால் தொகுதிகள் மிகப் பழையனவாகவும் பக்கங்கள் மிக்க எளிதில் உடைகின்றனவாகவும் இருப்பதனால் அவை இலகுவாகக் கிழிந்துபோகும் சாத்தியத்தைக் கொண்டுள்ளன. ஆதலால், அவற்றை உடனடியாக அணுகுவதற்காக அவற்றைப் பேணிக்காத்தல் அத்தியாவசியமாகவிருந்தது. எனினும் அரசாங்க வர்த்தமானிகளை இப்போது தொடரிணையினூடாக அணுகமுடியும்; பழையவை தொடரிணையில் கிடைக்கக்கூடியனவல்லவென்பதுடன் அவை இலகுவாக அணுகத்தக்கனவுமல்ல.

இந்தப் பின்னணியில் சட்டவரைஞர் திணைக்களம் ICTA இன் உதவியுடன், பதிவேட்டறையிலும் நூலகத்திலும் உள்ள அந்த ஆவணங்களை ஆவணக்காப்புக்காகவும் நீண்டகாலப் பேணிக்காப்புக்காகவும் ஊடுகதிர்ப்படமெடுப்பதற்கும் எண்ணிமமயப்படுத்துவதற்குமான கருத்திட்டமொன்றைத் தொடங்கியது.

ஒரு சேவை வழங்குநரின் சேவைகளை ஈடுபடுத்துவதன்மூலம் திணைக்களமானது கருத்திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததுடன் வினைத்திறனானமுறையிலும் பயனுள்ளவகையிலும் எண்ணிமமயப்படுத்தப்பட்ட ஆவணங்களைத் தேடி மீட்டுப்பெறுவதற்கான இணையப் பாவனைமுறை திணைக்கள அலுவலர்களினால் இப்போது பயன்பாட்டிலுமுள்ளது.

3. <u>வெஸ்ட்லோவின் வழங்குகை</u>

சட்டவாக்க வரைஞர்கள் தமது கடமைகளைப் புரிவதில் நாளதுவரையானவற்றை அறிந்துள்ளவர்களாகவிருப்பதும் சட்டத்துறையில் மிக்க அண்மையிலான அபிவிருத்திகளை அறிந்துகொள்வதும் அத்தியாவசியமாகவுள்ளது. அதற்காக வளன்கள் கிடைக்கக்கூடியமையும் இலகுவான அணுகுகையும் கட்டாயத் தேவைகளாகவுள்ளன.

ஆதலால், திணைக்களமானது, சட்ட உயர்தொழிலர்களுக்கான தொடரிணைச் சட்ட ஆராய்ச்சிச் சேவையான ‘வெஸ்ட்லோ’வை அதன் அலுவலர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக்குவதற்கு நாடியது. திறைசேரியிடமிருந்தும் நீதியமைச்சிடமிருந்தும் அவசியமான அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளனவென்பதுடன் திணைக்களமானது வழங்குகையை இறுதியாக்கும் நடைமுறையிலுமுள்ளது.

4. <u>லங்கா அரசாங்க வலையமைப்பு (LGN)</u>

திணைக்களம் LGN உடன் இணைக்கப்பட்டுள்ளது. அலுவலகமுறையான மின்னஞ்சற் கணக்குகள் LGN இன்கீழ் அலுவலர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், இத்திணைக்களம், LGN 2.0 கருத்திட்டத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் இந்த முயற்சியின் பாகமாக அதற்கு wifi வசதிகளும் அளிக்கப்பட்டன.

5. திணைக்களத்திலுள்ள எல்லாச் சட்ட அலுவலர்களுக்கும் பொறுப்பிக்கப்பட்ட வேலையை (இவ்வேலை, பாராளுமன்றச் சட்டங்களைத் தயாரித்தல் தொடர்பான சட்டமூலங்களையும் அத்தகைய சட்டங்களுக்கு உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களையும் வரைதல், மற்றும் தனியார் உறுப்பினர் சட்டமூலங்களை மீளாய்வு செய்தல் மற்றும் வேறு இணைந்த வேலைகள் என்பவற்றைக் கொண்டுள்ளது) கிரமமான அடிப்படையில் பின்தொடரும்படியும் அத்தகைய வேலையை மும்மொழிகளிலும் பூர்த்தி செய்யும்படியும் அவர்களுக்குத் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

6. அனுபவம் பெற்ற சிரேட்ட சட்டவரைஞர்களின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையில், சட்டவாக்கங்களை வரைவதில் உதவிபெறுவதற்கென நான்கு ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

7. தகாத தாமதமின்றி சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பான பணியை நிறைவேற்றுவதற்கென அவசியமான எண்ணிக்கையினரான சட்ட அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

8. இத்திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட A தர நூலகம், சட்டம் என்ற விடயம் பற்றி எழுதப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்கு அவசியமான வசதிகளைத் திணைக்கள அலுவலர்களுக்கு வழங்குகின்றது.

9. திணைக்களத்தின் எல்லாச் சட்ட அலுவலர்களும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்களும், அரசாங்க சேவையின் மதிப்பைப் பேணிக்காக்கும் வகையில் வேலை நேரங்களின் போது தமது அலுவலகமுறையான கடமைகளைக் கவனிக்க வேண்டுமென்ற பயன்பட்டனவான தெளிவான அறிவுறுத்தல்கள் அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளதுடன் சட்ட அலுவலர்களுட்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர்கள் எல்லோரும் தமது கடமைகளை எடுத்துக்காட்டான முறையில் நிறைவேற்றுகின்றனரென்பதைக் குறிப்பிடவும் வேண்டும்.

10. எல்லாச் சட்ட அலுவலர்களினதும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்களினதும் அறிவையும், மனநிலையையும், தேர்ச்சிகளையும் சீராக்குவதனை இலக்காகக்கொண்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு அத்தகைய எல்லா அலுவலர்களுக்கும் போதிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.